[25th July 1964

திரு. ஜே. மாதா கவுடர் : உதகையிலேயே ஏற்படுத்தாத நிலையில் நம்முடைய ராஜ்யத்தில் வேறு எங்கேயாவது இம்மாதிரி தொழிற்சாலை ஏற்படுத்தி, உதகையிலிருந்து பாலை அங்கு கொண்டு செல்வதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சிறிய அளவில் கோவைக்கு அருகாமையில் அமைப்பதற்குத் தனியார் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : குழந்தை உணவு தயாரிப்பதற்கு, வெளி நாட்டுக் சம்பெனியார் இம்மாதிரி தொழிற்சாலை நடத்துவதற்கு முன்வந்தார்கள் என்பது உண்மையா ?

கனம் திரு. ஆர் வெங்கட்டராமன்: சற்றேறக்குறைய 10 வருஷங்களுக்கு முன்பு பாரி அண்டு கம்பெனியார் இதைச் செய்யலாமா என்று பரிசீலனை செய்து பார்த்து, 'இயலாது' என்று விட்டுவிட்டார்கள். ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பு 'பாக்ஸ்டெல் கோ-வாபரடேிவ் சொஸைடி' டென்மார்க், பரிசீலனை செய்து பார்த்துவிட்டு, அவர்களும் 'இயலாது' என்று போய்விட்டார்கள்.

திரு. ஜே. மாதா கவுடர் : சிறிய அளவிலே கோவைக்கு அருகாமையில் ஒரு பாக்டரி ஏற்படுத்தலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த மாநிலத்திற்கே நீலகிரி ஜில்லா ஒரு குழந்தை மாதிரி இருப்பதினால், குழந்தை உணவு பாக்டரி அங்கே வருமா என்று எதிர்பார்த்தார்கள். அது இல்லாமல் போய் விட்டது. இம்மாதிரி சிறிய பாக்டரியையாவது நீலகிரியில் ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தனியார் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னேன்.

Thennal Project

* 705 *Q.*—SRI K. M. KRISHNASWAMI : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) when the construction of the proposed Thennal Project near Kappiyambuliyur in Valavanur Constituency will be started;

(*b*) whether plans and estimates for the same have been prepared; and

(*c*) the estimated cost thereof?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No scheme is proposed to be taken up, near Kappiyambuliyur village in Valavanur Constituency. But there is a proposal by name "Thennal Project" near Kumulam village in Villupuram taluk of South Arcot district. The scheme is under contemplation and guagings are being conducted. conducted.

(*b*) Plans and estimates for the scheme have not been prepared.

(*c*) Does not arise.

25th July 1964]

புலவர் கா. கோவிந்தன் : தென்னல் திட்டம் என்பது விளக்கமாக இல்லை. அது என்ன திட்டம் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : பாசனத் திட்டம்.

Rental flats for low-paid Government servants

* 706 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the present stage of the scheme for the construction of storeyed rental flats and apartments in Kavandanpalayam, Coimbatore for the low-paid Government employees;

(*b*) the total estimated cost of the scheme;

(*c*) the progress made so far regarding the construction of similar flats and apartments in Sengulam Colony in Tiruchirappalli and in Madurai City; and

(*d*) the estimated cost of these projects?

THE HON. SRI R. VENKATARAMAN : A statement is placed on the table of the House. இது குறித்து சபையில் அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. ஏ. மதியழகன் : அரசாங்க ஊழியர்களுக்கு இதைப் போல மற்ற மாவட்டத் தலைநகரங்களிலும்—வேலூர், தஞ்சாவூர், கடலூர் இப்பேர்ப்பட்ட இடங்களில்—ஏதாவது திட்டம் உண்டா ? அப்படியானால், அதைப்பற்றி விவரம் என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஜில்லா தலைநகரங்களில் 50 குவார்டர்ஸ் 'லோ பெய்டு கவர்ன்மெண்டு சர்வென்ட்ஸ்'-களுக்காகக் கட்டவேண்டும் என்ற ஒரு யோசனை ஹவுசிங் போர்டில் இருக்கிறது.

சலவைத் தொழிலாளர்கள்

* 707 கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள சலவைத் தொழிலாளர் வாழ்க்கை நிலை பற்றி ஆராய குழு ஏதும் சர்க்கார் நியமித்ததா ?

(இ) ஆமெனில் விவரமென்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) A Special Officer was appointed in October 1961 to enquire into the working conditions of washermen in this State.

(*b*) The Special Officer's report was received in September 1962 and was examined by the Government. A statement containing the recommendations of the Special Officer and the action taken by the Government thereon was placed before the House with reference to Starred Question No. 1256 (400) answered on 21st November 1963.

---

a Printed as Appendix I on page 323 infra.